# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.6132/F/2024**

திரு சு. ரமேஷ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு - 637 211, நாமக்கல் மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 18.10.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 18.12.2024 |

****

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு சு. ரமேஷ் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ப. தமிழரசி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடந்த 09.08.2024 அன்று அளிக்கப்பட்ட குறைதீர் மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரங்கள், தனது மனு தங்கள் அலுவலகத்தின் பதிவேட்டின் பதியப்பட்டிருப்பின் அப்பக்கத்தின் ஒளிநகல், தனது மனுவின்மீது எத்தனை நாட்களுக்குள் தீர்வு செய்யவேண்டும் என வரைமுறை குறித்த ஆணையிருப்பின் அவற்றின் ஒளிநகல், தங்கள் துறையின் அலுவலக கோப்புகளை பார்வையிட அனுமதி, தங்கள் துறையின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் பற்றிய விவரம், தங்கள் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் அவர்களின் கடமைகள் மற்றும் பணிகள் பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 15 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை ப.மு.4635/2024 (உ) நாள் 16.12.2024 தேதியிட்டு தனக்கு காலதாமதமாக வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக காலதாமதாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் இன்றைய விசாரணையின்போது தெரிவித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து கொள்கிறது. எனவே, இனி வருங்காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு காலதாமதமின்றி உடனடியாக தகவல்களை வழங்குமாறு பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் அறிவுறுத்தி, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.6132/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு - 637 211, நாமக்கல் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.CP.6132/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு சு. ரமேஷ்,
எண்.71-H, பூசாரி காடு, காவேரி நகர்,
குமாரபாளையம் - 638 183,
நாமக்கல் மாவட்டம்.

Copy to: File
SNPS / 21.04.2025